# பள்ளிக் கல்வித்துறை, தூத்துக்குடி மாவட்டம்

## தமிழ் இலக்கியத் திறனறித் தேர்வு – 2024

## மாதிரித்தேர்வு – 1

வகுப்பு : 11 மதிப்பெண்கள் : 100 காலம் : 2 மணி நேரம்

1. திருவிளையாடற் புராணம் ................ காண்டங்களும் ................ படலங்களும் உடையது.

அ. 6, 62 ஆ. 3, 60 இ. 6, 64 ஈ. 3, 64

2. பிள்ளைத்தமிழ் பருவங்களை வரிசைப்படுத்துக.

அ. தால், முத்தம், சப்பாணி, செங்கீரை, காப்பு

ஆ. காப்பு, தால், முத்தம், சப்பாணி, செங்கீரை

இ. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம்

ஈ. செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், காப்பு

3. மலர்கள் தரையில் நழுவும், எப்பொழுது ?

அ. அள்ளி முகர்ந்தால் ஆ. தளரப் பிணைத்தால்

இ. இறுக்கி முடிச்சிட்டால் ஈ. காம்பு முறிந்தால்

4. "குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை" – இக்குறட்பாவில் பயின்று வரும் அணி ................

அ. உவமை அணி ஆ. வேற்றுமை அணி

இ. சொல்பின்வருநிலை அணி ஈ. வஞ்சப் புகழ்ச்சி அணி

5. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ................ ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது.

அ. 1904 ஆ. 1905 இ. 1906 ஈ. 1907

6. பொருந்தாதது எது?

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ. படலை | – | மாலை |
| ஆ. முனிவு | – | அன்பு |
| இ. பிணித்து | – | கட்டி |
| ஈ. துணர் | – | மலர்கள் |

7. பொறி இன்மை யார்க்கும் பழிஅன் றறிவறிந் தாள்வினை இன்மை ................

அ. விழி ஆ. பழி இ. இழி ஈ. வழி

8. 'சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்' – இப்பாடல் அடி எந்த பொருள்கோளுக்குச் சான்று ?

அ. நிரல் நிறை ஆ. ஆற்று நீர் இ. கொண்டுகூட்டு ஈ. மொழி மாற்று

9. "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" – இடம்பெறும் நூல் ................

அ. கலிங்கத்துப்பரணி ஆ. புறநானூறு இ. பொருநராற்றுப்படை ஈ சிலப்பதிகாரம்

10. "அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" என்று ................ குறிப்பிடுகிறது.

அ. புறநானூறு ஆ. நற்றிணை இ. திருக்குறள் ஈ. குறுந்தொகை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. பொருத்துக.

அ. Renaissance – (i). சூறாவளி

ஆ. Terminology – (ii). கலைச்சொல்

இ. Patent – (iii.) மறுமலர்ச்சி

ஈ. Tornado – (iv). காப்புரிமை

அ. அ–(iii) ஆ–(ii) இ–(iv) ஈ–(i) ஆ. அ–(ii) ஆ–(iii) இ–(i) ஈ–(iv)

இ. அ–(i) ஆ–(iii) இ–(iv) ஈ–(ii) ஈ. அ–(ii) ஆ–(iv) இ–(iii) ஈ–(i)

12. "எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்
சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்" – ................

அ. நன்னூல் ஆ. தொல்காப்பியம் இ. தண்டியலங்காரம் ஈ. சிலப்பதிகாரம்

13. ஜெயகாந்தன் அவர்கள் பெற்ற விருதுகள் ................

(i). ஞானபீட விருது (ii). தாமரைத்திரு விருது

(iii). சாகித்திய அகாதெமி விருது (iv). குடியரசுத் தலைவர் விருது

அ. (i), (ii) சரி ஆ. (i), (ii), (iii) சரி இ. (i), (ii), (iv) சரி ஈ. (i), (ii), (iii), (iv) சரி

14. "மருந்தே ஆயினும் விருந்தோடு உண்" என்று கூறியவர்

அ. திருவள்ளுவர் ஆ. இளம்பெருவழுதி இ. ஔவையார் ஈ.கபிலர்

15. செய்யுளிசை அளபெடைக்குச் சான்று ................

அ. உரனசைஇ ஆ. கெடுப்பதூஉம் இ. எங்ங்கிறைவன் ஈ. படாஅ பறை

16. 'திருக்குறள் நீதி இலக்கியம்' நூலின் ஆசிரியர் ................

அ. அ.கா.பெருமாள் ஆ. க.த. திருநாவுக்கரசு இ. சுரதா ஈ. உமா மகேஸ்வரி

17. தேம்பாவணி ................ பாடல்களைக் கொண்டுள்ளது.

அ. 3615 ஆ. 3516 இ. 3165 ஈ. 3160

18. ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டில் முடியும் பா ................

அ. வஞ்சிப்பா ஆ. கலிப்பா இ. வெண்பா ஈ. ஆசிரியப்பா

19. பொருந்தாதது எது?

(i). பெருமாள் திருமொழி – குலசேகராழ்வார்

(ii). மதுரைக்கலம்பகம் – குமரகுருபரர்

(iii). முல்லைப்பாட்டு – கபிலர்

(iv). காலக் கணிதம் – கண்ணதாசன்

அ. (i), (ii) ஆ. (i), (iv) இ. (ii) ஈ. (iii)

20. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ................

அ. எழுவாய் ஆ. வேற்றுமை உருபு இ. உரிச்சொல் ஈ. உவம உருபு

21. கும்பகோணம் இவ்வூர்ப் பெயருக்கான மரூஉ ................

அ. கும்பம் ஆ. கோணம் இ. குணம் ஈ. குடந்தை

22. கூற்று : ம.பொ.சி. எட்டாம் வகுப்புடன் பள்ளிப்படிப்பை நிறுத்திவிட்டார்.

காரணம் : குடும்ப வறுமையின் காரணமாகப் பள்ளியிலிருந்து நின்று விட்டார்.

அ. கூற்று சரி, காரணம் தவறு ஆ. கூற்று தவறு, காரணம் சரி

இ. கூற்று, காரணம் இரண்டும் சரி ஈ. கூற்று, காரணம் இரண்டும் தவறு

23. திசைபாலர் மொத்தம் ................

அ. எண்மர் ஆ. ஐவர் இ. மூவர் ஈ. நால்வர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

24. ஐம்பெருங்காப்பிய முறைவைப்பு பற்றிக் கூறும் நூல் ................

அ. சிலப்பதிகாரம் ஆ. பன்னிருபாட்டியல்

இ. புறப்பொருள் வெண்பாமாலை ஈ. திருத்தணிகை யுலா

25.சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் ................

அ. சண்முகசுந்தரம் ஆ. ஜகந்நாதன்

இ. தேவநேயப் பாவாணர் ஈ. க. அப்பாத்துரையர்

26. ஒருமொழி ஒருபொரு ளனவாம் ................
பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன.

அ. தனிமொழி ஆ. தொடர்மொழி இ. பொதுமொழி ஈ. எதுவுமில்லை

27. உலக காற்று நாள் ................

அ. ஜூன் 5 ஆ. ஜூன் 10 இ. ஜூன் 15 ஈ. ஜூன் 20

28. முல்லைப்பாட்டு ................ பாவால் இயற்றப்பட்டது. இது ................ அடிகளைக் கொண்டது.

அ. வெண்பா, 103 ஆ. ஆசிரியப்பா, 103 இ. கலிப்பா, 113 ஈ. வஞ்சிப்பா, 103

29. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் ................

அ. குறிஞ்சிப்பாட்டு ஆ. முல்லைப்பாட்டு

இ. நெடுநல்வாடை ஈ. மலைபடுகாடாம்

30. பொருத்துக:

அ. மூதூர் –(i) மூன்றாம் வேற்றுமைத் தொகை

ஆ. உறுதுயர் –(ii) பண்புத்தொகை

இ. கைதொழுது –(iii) உரிச்சொல் தொடர்

ஈ. தடக்கை – (iv )வினைத்தொகை

அ. ii, iv, i, iii ஆ. iv, ii, i, iii இ. iii, iv, ii, i ஈ. ii, iii, i, iv

31. வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயலுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை ................
ஆண்டில் தொடங்கியது.

அ. 2001 ஆ. 2000 இ. 2002 ஈ. 1999

32. தொகைநிலைத் தொடர் ................ வகைப்படும்; தொகாநிலைத்தொடர் ................ வகைப்படும்.

அ. 9 ,6 ஆ. 3, 6 இ. 6, 9 ஈ. 6, 3

33. அன்மொழித்தொகைக்குச் சான்று தருக.

அ. மார்கழித் திங்கள் ஆ. மதுரை சென்றார்

இ. தாய்சேய் ஈ. சிவப்பு சட்டை பேசினார்

34. தவறானதைத் தேர்வு செய்க.

அ. Tempest – சூறாவளி ஆ. Land breeze – நிலக்காற்று

இ. Whirlwind – சுழல் காற்று ஈ. Sea breeze – கடற்காற்று

35. வேறுபட்டதைக் கண்டறிக.

அ. நோக்கல் ஆ. செப்பல் இ. வியத்தல் ஈ. ஆடுக

36. மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் ................ இல் குறிப்பிட்டுள்ளார்.

அ. மரபியல் ஆ. எச்சவியல் இ. பெயரியல் ஈ. வினையியல்

39. 'வருக' இச்சொல்லில் அமைந்துள்ள விகுதி ................

அ. பெயரெச்ச விகுதி ஆ. வியங்கோள் வினைமுற்று விகுதி

இ. வினையெச்ச விகுதி ஈ. தொழிற்பெயர் விகுதி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

37. "கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை" இடம்பெறும் நூல் ................

அ. அகநானூறு  ஆ. புறநானூறு  இ. கலித்தொகை  ஈ. ஐங்குறுநூறு

38. முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள் ................

அ. இரங்கலும் இரங்கல் நிமித்தமும்  ஆ. புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

இ. பிரிதலும் பிரிதல் நிமித்தமும்  ஈ. இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

40. நிறம், வடிவம், சுவை , அளவு முதலானவற்றை உணர்த்துவது ................

அ. தொழிற்பெயர்  ஆ. காலப்பெயர்  இ. இடப்பெயர்  ஈ. பண்புப்பெயர்

41. 'தைத்திங்கள்' என்பது ................

அ. அன்மொழித் தொகை  ஆ. பண்புத்தொகை

இ. உம்மைத்தொகை  ஈ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

42. பொருத்துக.

1. ஐயூர் முடவனார் – அ. செந்தமிழின் பின்னுதித்த தென்றலே
2. ஔவையார் – ஆ. வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்
3. இளங்கோவடிகள் – இ. வாயுவழக்கம் ஆயுள் அறிந்து
4. பலப்பட்டடைச் சொக்கநாத புலவர் – ஈ. வளிமிகின் வலி இல்லை

அ. 1–ஈ, 2–அ, 3–ஆ, 4–இ  ஆ. 1–ஆ, 2–இ, 3–அ, 4– ஈ

இ. 1–ஈ, 2–இ, 3–ஆ, 4–அ  ஈ. 1–இ , 2–ஈ, 3–ஆ, 4– அ

43. முசிறி துறைமுகம் யாருடையது?

அ. சோழர்  ஆ. பாண்டியர்  இ. சேரர்  ஈ. பல்லவர்

44. பொருள் தருக – ப்ராண ரஸம்.

அ. காற்று  ஆ. உயிர்வளி  இ. மந்தவெளி  ஈ. வாயுக்காற்று

45. சரியான பழமொழி தொடரைத் தெரிவு செய்க.

அ. விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு  ஆ. மருந்தும் விருந்தும் மூன்று நாளைக்கு

இ. மூன்று நாளைக்கு மருந்தும் விருந்தும்  ஈ. மூன்று நாளைக்கு விருந்தும் மருந்தும்

46. 'நைடதம்' என்னும் நூலை இயற்றியவர் ................

அ. அதிவீரராம பாண்டியன்  ஆ. நப்பூதனார்

இ. ஜெயங்கொண்டார்  ஈ. பெருங்கௌசிகனார்

47. 'எய்துவர் எய்தாப் பழி' – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்ப்பாடு எது?

அ. கூவிளம் தேமா மலர்  ஆ. கூவிளம் புளிமா நாள்

இ. தேமா புளிமா காசு  ஈ. புளிமா தேமா பிறப்பு

48. பின்வருவனவற்றில் பொருந்தாத ஒன்றைத் தெரிவு செய்க.

அ. வியத்தல் – பலர்பால் வினைமுற்று விகுதி

ஆ. பொழிந்த – பெயரெச்ச விகுதி

இ. வாழ்க – வியங்கோள் வினைமுற்று விகுதி

ஈ. மலைந்து – வினையெச்ச விகுதி

49. கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கூறும் நூலும், ஆசிரியரும் ................

அ. கம்பராமாயணம், கம்பர்  ஆ. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

இ. கலிங்கத்துப்பரணி, ஜெயங்கொண்டார்  ஈ. திருக்குறள், திருவள்ளுவர்

50. சங்க இலக்கியம் அரசனின் கடமையாகக் கூறுவது .................

அ. நீர்நிலை பெருக்குதல் ஆ. நிலவளம் காணுதல்

இ. உணவு பெருக்கம் செய்தல் ஈ. அனைத்தும்

51. மரபுத் தொடருக்கான பொருளைப் பொருத்துக.

(i). மனக்கோட்டை – அ. வெறும் கற்பனை

(ii). கண்ணும் கருத்தும் – ஆ. காலம் தாழ்த்துதல்

(iii). அள்ளி இறைத்தல் – இ. முழுக்கவனம்

(iv). ஆறப்போடுதல் – ஈ. அளவில்லாமல் செலவு செய்தல்

அ. (i)–அ, (ii)–ஈ, (iii)–ஆ, (iv)–இ ஆ. (i)–இ, (ii)–அ , (iii)–ஈ, (iv)–ஆ

இ. (i)–இ, (ii)–ஈ, (iii)–அ, (iv)–ஆ ஈ. (i)–அ, (ii)–இ, (iii)–ஈ , (iv)–ஆ

52. தவறான இணையைத் தெரிவு செய்க.

அ. மா முன் நேர் – நேரொன்றாசிரியத்தளை

ஆ. விள முன் நேர் – இயற்சீர் வெண்டளை

இ. காய் முன் நிரை – நிரையொன்றாசிரியத்தளை

ஈ. கனி முன் நிரை – ஒன்றிய வஞ்சித்தளை

53. வள்ளலின் பொருள் இரவலின் பொருள், வள்ளலின் வறுமை இரவலின் வறுமை – எனப் பாடியவர்.................

அ. அதியன் ஆ. நச்செள்ளையார் இ. பெருஞ்சாத்தனார் ஈ. பெரும்பதுமனார்

54. கண்ணதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற படைப்பு .................

அ. தைப்பாவை ஆ. இயேசு காவியம் இ. காலக்கணிதம் ஈ. சேரமான் காதலி

55. பொருத்துக.

1. யாப்பின் உறுப்புகள் – அ. நான்கு

2. அசை – ஆ. ஏழு

3. பாவின் வகைகள் – இ. இரண்டு

4. தளை – ஈ. ஆறு

அ. 1–ஆ, 2–ஈ, 3–அ, 4–இ ஆ. 1–ஈ, 2–அ, 3–ஆ, 4–இ

இ. 1–இ, 2–ஈ, 3–அ, 4–ஆ ஈ. 1–ஈ, 2–இ, 3–அ, 4–ஆ

56. அன்றாட வாழ்வில் அறிவியல் என்ற நூலின் ஆசிரியர் .................

அ. நீலமணி ஆ. ச. தமிழ்செல்வன் இ. ஐன்ஸ்டைன் ஈ. கலீலியோ

57. செந்தீ – பிரித்து எழுதுக.

அ. செம் + தீ ஆ. செம்மை + தீ இ. செந் + தீ ஈ. சிவப்பு + தீ

58. யானை, புறா, மலை என்பது .................

அ. உயர்திணை, ஆண்பால் ஆ. உயர்திணை, பலர்பால்

இ. அஃறிணை ஒன்றன்பால் ஈ. அஃறிணை, பலவின்பால்

59. தமிழெண்ணால் நிரப்புக – பால் ................. வகைப்படும்.

அ. ரு ஆ. ச இ. ங ஈ. சா

60. பார்ப்பன் இச்சொல்லுக்கான வேர்ச் சொல் .................

அ. பா ஆ. பார் இ. பார்த்த ஈ. பார்த்தல்

61. தோன்று – இச்சொல்லை வினைமுற்றாக மாற்றுக.

அ. தோன்றுதல் ஆ. தோன்றா இ. தோன்றி ஈ. தோன்றினான்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

62. கூற்று 1 : 'சதம்' என்றால் நூறு என்று பொருள்.

கூற்று 2 : செய்குதம்பிப் பாவலர் ஒரு சதாவதானி ஆவார்.

அ. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

இ. கூற்று 1, 2 சரி ஈ. கூற்று 1, 2 தவறு

63. 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்னும் நூலின் ஆசிரியர் ................

அ. மணவை முஸ்தபா ஆ. வைரமுத்து

இ. ராகுல் சாங்கிருத்யாயன் ஈ. உமாமகேஸ்வரி

64. பெருக்கி, திருத்தி, அகற்றி என்பன ................

அ. பெயரெச்சங்கள் ஆ. வினையெச்சங்கள்

இ. உம்மைத் தொகைகள் ஈ. வினைத்தொகைகள்

65. சந்திப் பிழைகளற்ற தொடரைத் தெரிவு செய்க.

அ. வாழ்க்கை பயணமே வேறுபட்டப் பாடங்களைக் கற்றுத் தருகிறது.

ஆ. வாழ்க்கைப் பயணமே வேறுபட்டப் பாடங்களை கற்றுத் தருகிறது.

இ. வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

ஈ. வாழ்க்கை பயணமே வேறுபட்ட பாடங்களை கற்று தருகிறது.

66. கலைச்சொல் தருக – Revolution

அ. மறுமதிப்பீடு ஆ. மறு சிந்தனை இ. மறுமலர்ச்சி ஈ. புரட்சி

67. பொருள்கோள் ................ வகைப்படும்.

அ. 10 ஆ. 6 இ. 4 ஈ. 8

68. மெய்க்கீர்த்திக்கு முன்னோடியாக இருந்த சங்க இலக்கிய நூல் ................

அ. பரிபாடல் ஆ. பதிற்றுப்பத்து இ. முல்லைப்பாட்டு ஈ. புறநானூறு

69. ம.பொ.சி யின் தன் வரலாற்று நூல் ................

அ. நமது போராட்டம் ஆ. மக்கள் போராட்டம்

இ. சிற்றகல் ஒளி ஈ. எனது போராட்டம்

70. பொருத்துக.

1. தூசு – அ. சந்தனம்
2. துகிர் – ஆ. நறுமணப்பொடி
3. ஆரம் – இ. பட்டு
4. சுண்ணம் – ஈ. பவளம்

அ. 1– இ, 2–அ, 3–ஈ, 4–ஆ ஆ. 1–இ, 2–ஈ, 3–அ, 4–ஆ

இ. 1–ஆ, 2–அ, 3– ஈ, 4–இ ஈ. 1–ஈ, 2–அ, 3–இ, 4–ஆ

71. ராஜம் கிருஷ்ணனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ................

அ. கரிப்பு மணிகள் ஆ. குறிஞ்சித்தேன்

இ. வேருக்கு நீர் ஈ. கூட்டுக்குஞ்சுகள்

72. பாடாண் திணை – பிரித்து எழுதுக.

அ. பாடா + திணை ஆ. பாடு + ஆண் + திணை

இ. பாடு + ஆண்திணை ஈ. பா + ஆண் + திணை

73. இலக்கணக் குறிப்பு தருக – 'தொழுது'.

அ. பெயரெச்சம் ஆ. வினையெச்சம்

இ. தொழிற்பெயர் ஈ. எதிர்மறைத்தொழிற்பெயர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

74. வாழை இலை விருந்து விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்ற சங்கம் ................

அ. மினசோட்டா தமிழ்ச் சங்கம் ஆ. கோலாலம்பூர் தமிழ்ச் சங்கம்

இ. மலேசியா தமிழ்ச் சங்கம் ஈ. யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம்

75. பின்வருவனவற்றுள் உலாவியைத் தேர்ந்தெடுக்க.

அ. Whatsapp ஆ. Facebook இ. Crome ஈ. Twitter

76. சந்தாசாகிப் ஆட்சி செய்த பகுதி ................

அ. மதுரை ஆ. வேலூர் இ. திருச்சி ஈ. ஆற்காடு

77. வரகு, சாமை ஆகிய உணவுப் பொருட்கள் எந்தத் திணைக்குரியவை?

அ. குறிஞ்சி ஆ. முல்லை இ. மருதம் ஈ. நெய்தல்

78. அடிச்சுவடு – அகராதிப் பொருள் தருக.

அ. வழி செப்பம் ஆ. சரியான நிலை இ. காலடிக்குறி ஈ. பழிச்சொல்

79. முறைப்படுத்துக.

அ. எழுத்து, அசை, சீர், அடி, தொடை, தளை

ஆ. எழுத்து, அசை, சீர், அடி, தளை, தொடை

இ. எழுத்து, சீர், அசை, அடி, தொடை, தளை

ஈ. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை

80. இரு நாட்டு வீரர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ................

அ. நாட்டைக் கைப்பற்றல் ஆ. வலிமையை நிலைநாட்டல்

இ. ஆநிரை கவர்தல் ஈ. கோட்டையை முற்றுகையிடல்

81. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கத்தின் பண்புகள் எத்தனை?

அ. எட்டு ஆ. ஒன்பது இ. ஆறு ஈ. பத்து

82. கள் விற்பவர் ................

அ. பரதவர் ஆ. உமணர் இ. பாசவர் ஈ. வலைச்சியர்

83. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு -----------

அ. காண்டம் ஆ. காதை இ. இலம்பகம் ஈ. படலம்

84. "காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது".– இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்ப்பாடு யாது?

அ. நாள் ஆ. மலர் இ. காசு ஈ. பிறப்பு

85. பொருத்துக.

(i). திருக்குறள் – 1. 133 அதிகாரங்கள்

(ii). அறம் – 2. 38 அதிகாரங்கள்

(iii). பொருள் – 3. 70 அதிகாரங்கள்

(iv). இன்பம் – 4. 25 அதிகாரங்கள்

அ. (i)–3 (ii)–4 (iii)–1 (iv)–2 ஆ. (i)–3 (ii)–1 (iii)–2 (iv)–4

இ. (i)–1 (ii)–2 (iii)–3 (iv)–4 ஈ. (i)–4 (ii)–3 (iii)–2 (iv)–1

86. திருக்குறளின் வேறு பெயர்களுள் பொருந்தாதது எது?

அ. பொய்யாமொழி ஆ. வாயுரை வாழ்த்து இ. பொருளுரை ஈ. முதுமொழி

87. கபிலரின் நண்பர் ................

அ. சமண முனிவர் ஆ. அகத்திய முனிவர்

இ. பரஞ்சோதி முனிவர் ஈ. இடைக்காடனார்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

88. பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ. வெட்சித் திணை – ஆநிரை கவர்தல்

ஆ. கரந்தைத் திணை – ஆநிரை மீட்டல்

இ. வஞ்சித்திணை – மண்ணாசை காரணமாகப் போர்

ஈ. காஞ்சித்திணை – கோட்டையைக் காத்தல்

89. திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் ................

அ. நட்பு ஆ. கேள்வி இ. குறிப்பறிதல் ஈ. ஊக்கமுடைமை

90. மலைபடுகாடாம் ................ அடிகளைக் கொண்டது.

அ. 583 ஆ. 543 இ. 453 ஈ. 563

91. சரியான கூற்றினைக் கண்டறிக.

1. நன்னன் என்பவன் குறுநில மன்னன்

2. மலைபடுகடாமின் பாட்டுடைத் தலைவன் நன்னன்

3. மலைபடுகடாமை இயற்றியவர் பெருங்கௌசிகனார்

அ. 1, 2 சரி ஆ. 2, 3 சரி இ. 3 மட்டும சரி ஈ. மூன்றும் சரி

92. 'பொழிந்த' என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை ................

அ. பொழிந்து + அ ஆ. பொழி + த் + த் + உ

இ. பொழி + த் + ந் + த் + அ ஈ. பொழி + த்(ந்) + த் + அ

93. மரவேர் என்பது ................ புணர்ச்சி.

அ. இயல்பு ஆ. திரிதல் இ. தோன்றல் ஈ. கெடுதல்

94. 'முந்நீர்' என்பதன் பொருள் ................

அ. கடல் ஆ. கப்பல் இ. பயணம் ஈ. நீர்

95. உடன்பட்டுக் கூறும் விடை ................

அ. சுட்டு விடை ஆ. மறை விடை இ. நேர்விடை ஈ. ஏவல் விடை

96. நான்கறி வதுவே அவற்றொடு ................

அ. மூக்கே ஆ. நாவே இ. கண்ணே ஈ. செவியே

97. மதுரகவி – அகராதிப் பொருள் தருக.

அ. கொடுத்த பொருளை உடனே பாடும் பாட்டு

ஆ. இனிமை பெருகப் பாடும் பாட்டு

இ. விரித்துப் பாடப்பெறும் பாட்டு

ஈ. சித்திரத்தில் அமைத்ததற்கு ஏற்பப் பாடும் இறைகவி

98. 'நதி வெள்ளம் காய்ந்து விட்டால் நதி செய்த குற்றம் இல்லை' – பாடலின் ஆசிரியர் ................

அ. கண்ணதாசன் ஆ. கம்பர் இ. ஜெயகாந்தன் ஈ. நாகூர்ரூமி

99. ஊர்த்தி ஓட்டுபவர், ஒவ்வொருவரும் கையில் கட்டாயம் வைத்திருக்க வேண்டியவை ..........

(i). ஓட்டுநர் உரிமம்

(ii). ஊர்தியின் பதிவுச் சான்றிதழ்

(iii)). ஊர்த்திக் காப்பீட்டுச் சான்றிதழ்

அ. (i), (ii) ஆ. (i), (iii) இ. (ii), (iii) ஈ. (i), (ii), (iii)

100. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி ................

அ. ஜால்ரா ஆ. பறை இ. உறுமி ஈ. நாகசுரம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# பள்ளிக் கல்வித்துறை, தூத்துக்குடி மாவட்டம்

## தமிழ் இலக்கியத் திறனறித் தேர்வு – 2024

### மாதிரித் தேர்வு – 1

### விடைகள்

| வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஈ | 21 | ஈ | 41 | ஈ | 61 | ஈ | 81 | ஆ |
| 2 | இ | 22 | ஆ | 42 | இ | 62 | இ | 82 | ஈ |
| 3 | ஆ | 23 | அ | 43 | இ | 63 | இ | 83 | ஆ |
| 4 | அ | 24 | ஈ | 44 | ஆ | 64 | ஆ | 84 | ஈ |
| 5 | இ | 25 | அ | 45 | அ | 65 | இ | 85 | இ |
| 6 | ஆ | 26 | ஆ | 46 | அ | 66 | ஈ | 86 | ஈ |
| 7 | ஆ | 27 | இ | 47 | அ | 67 | ஈ | 87 | இ |
| 8 | ஆ | 28 | ஆ | 48 | அ | 68 | ஆ | 88 | ஈ |
| 9 | அ | 29 | ஆ | 49 | அ | 69 | ஈ | 89 | இ |
| 10 | ஆ | 30 | ஈ | 50 | ஈ | 70 | ஆ | 90 | அ |
| 11 | அ | 31 | ஆ | 51 | ஈ | 71 | இ | 91 | ஈ |
| 12 | இ | 32 | இ | 52 | இ | 72 | ஆ | 92 | ஈ |
| 13 | ஈ | 33 | ஈ | 53 | ஈ | 73 | ஆ | 93 | ஈ |
| 14 | இ | 34 | அ | 54 | ஈ | 74 | அ | 94 | அ |
| 15 | ஈ | 35 | ஈ | 55 | ஈ | 75 | இ | 95 | இ |
| 16 | ஆ | 36 | அ | 56 | ஆ | 76 | இ | 96 | இ |
| 17 | அ | 37 | ஆ | 57 | ஆ | 77 | ஆ | 97 | ஆ |
| 18 | இ | 38 | ஈ | 58 | இ | 78 | இ | 98 | அ |
| 19 | ஈ | 39 | ஈ | 59 | அ | 79 | ஈ | 99 | ஈ |
| 20 | ஆ | 40 | ஈ | 60 | ஆ | 80 | ஆ | 100 | ஆ |

பள்ளிக் கல்வித்துறை தூத்துக்குடி
www.Padasalai.Net